உற்பத்தி குறைவாக இருக்கின்றது. இதனால் வெளி மார்க்கெட்டில் தேய்காய் அதிக விலைக்குப் போகிறது. இருப்பினும், மக்கள் தேவைக்கு அதிகமாக வாங்கிச் செல்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு நல்ல இலாபமும் கிடைக்கிறது. அதேநேரத்தில், குறைந்த விலைக்கு வேண்டுமானால் எங்கள் கடைக்கு வாருங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கியிருக்கிற கடைக்கு வாருங்கள். நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தேங்காய் உற்பத்தி அதிகமாக இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து. இன்றைக்கு மைய அரசு கொப்பரைத் தேங்காயினுடைய விலையை ஒரு கிலோ ரூ.52.50 காசு என்று நிர்ணயித்திருக்கின்றது. ஆனால், வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ கொப்பரை 90 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விலைக்குப் போகிறது. எனவே, விலைவாசி இன்றைக்குக் கூடியிருக்கிறது. மைய அரசு கொடுத்திருக்கிற ஆதார விலையைக் காட்டிலும், விவசாயிகளுக்கு வெளி மார்க்கெட்டில் அதிகமாக இலாபம் தரக்கூடியதாக இருப்பதனால், இன்றைக்கு யாரும் கொள்முதல் செய்ய வருவது இல்லை. எனவே, தேங்காய் கொள்முதலை சங்கங்கள்மூலமாக வாங்குவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக துறைரீதியாக ஒரு குழு அமைக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அதற்கு எந்த வகையில் சாத்தியக் கூறுகள் இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 275, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

275—

விரிவுபடுத்துதல்

***20105—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை விரிவாக்கம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை 17.9 ஹெக்டேர் அளவிற்கு விரிவாக்கம் செய்திட மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தைச் சுற்றிலும் உள்ள பகுதியை மத்திய அரசின் Burn Standard Company, தற்போது SAIL, control-லில் எடுத்திருக்கிறது.

அதேபோல, டால்மியா மேக்னசைட், TATA Belpahar Refractories போன்ற தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. மேக்னசைட்டை இப்போது சீனாவிலிருந்து நிறைய இறக்குமதி செய்கிறார்கள். சேலத்தில் நல்ல கனிம வளம் இருக்கிறது. அதை இன்னும் விரிவாக்கம் செய்வதற்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கின்றது. டால்மியாகூட அந்தக் காலத்தில் 1,400 ஏக்கர் வாங்கியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நிறைய இடங்களில் mining செய்யாமல் இருக்கிறார்கள். 100 ஏக்கரை மட்டும் அரசுக்குத் திருப்பி கொடுத்துவிட்டு, அதற்குமேல் mining செய்வதில்லை. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் மூலமாக அந்த இடத்தில் விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டைடல் பார்க் அமைப்பதற்கு, Burn Standard Company-யிடமிருந்து 136 ஏக்கர் வாங்கினார்கள். ஆனால் 50, 56 ஏக்கருக்கு மேல் சரியான வரவேற்பு இல்லை என்பதால், 80 ஏக்கருக்கு மேல் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். அந்த இடம் மிகுந்த கனிம வளம் நிறைந்த பகுதி. உள்ளூர் அமைச்சர் அவர்களுக்கு

அதுகுறித்து நன்கு தெரியும், அங்கு இருக்கிற கனிம வளங்கள் எப்படிப் போனது என்று. அதனால் அந்த இடத்திலும் அரசுமூலமாக மேக்னசைட் கற்களை வெட்டியெடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல ELCOT நிறுவனத்திற்கு 164 ஏக்கர் கொடுத்திருந்தார்கள். அதில் 54 ஏக்கர் போக, 110 ஏக்கர் வருவாய்த் துறையிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த 54 ஏக்கரில் டைடல் பார்க் கட்டுகின்றபோது வேண்டுமானால் தவறு நடந்திருக்கலாமேயொழிய மாண்புமிகு அம்மா அவர்களது அரசில் தவறு நடக்கவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவதாக, மேக்னசைட் நிறுவனத்தைச் சுற்றி forest land இருக்கிறது. அதனால் மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டும். மாநில அரசினுடைய அனுமதியைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறைக்கு அனுமதிக்காக அனுப்பியிருக்கின்றது. இப்போதைக்கு 17.9 ஹெக்டேர் அளவிற்கு விரிவாக்கம் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்மொழிவு அனுப்பியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறு நடக்கவில்லை என்று சொன்னார்கள். நானும் தவறு நடக்கிறது என்று சொல்லவில்லை. நிறைய கனிம வளம் இருக்கிறது. அந்த இடம், தேசிய நெடுஞ்சாலையையொட்டி இருப்பதால், போக்குவரத்து வசதியுள்ள பகுதி. கனிம வளமுள்ள செட்டிச்சாவடி, ஏற்காடு அடிவாரப் பகுதியில் உள்ளது. இது சாலையோரமாக இருப்பதனாலே, அரசு மூலமாக கனிமங்கள்

வெட்டியெடுக்கப்படுமா என்பதைத்தான் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுக்குமா என தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். சுற்றி வனத் துறைப் பகுதி இருக்கின்ற காரணத்தினால், கனிம வளத் துறையைவிட வனத் துறையால் அதிகப் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. ஆகவே, நாங்களே உள்ளே செல்லவேண்டுமென்றால்கூட, வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செல்லமுடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் கனிம வளம், எந்தக் காலத்திலும் நம்மை விட்டுப் போகாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கையில் கிராபைட் ஆலை விரிவாக்கத் திட்டமும், உபதொழில் தொடங்கப்படுகிற திட்டமும் அரசிடம் இருக்கிறதா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், தென் மாவட்டங்களுக்கென்று தனிச் சலுகை அறிவிக்கின்றபொழுது சிவகங்கை மாவட்டத்தில் கிராபைட் தொழிற்சாலை அமைக்கப்படுமென்று சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதை, நிச்சயமாக கிராபைட் தொழிற்சாலை சார்ந்த தொழில்கள் வ்ரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*